**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.183/2022 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | திரு.பேரின்பராஜ் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of August 2026.

நான் தற்போது ஏர்வாடி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.09.2021 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு தலைமை காவலர் முத்துகுமார் என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது ஏர்வாடியை சேர்ந்த காஜா முகைதீன் மனைவி ரெஜினா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண்.259/2021 இதச பிரிவுகள் 294(b) and Sec.4 of TNPHW Act என்ற வழக்கை பதிவு செய்தார். அந்த புகார் மனு **அ.சா.ஆ.2** ஆகும். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர்

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.08.12 17:07:53 +0530

முத்து பாண்டியன் அவர்கள் பார்வைக்கு வைத்தார். அவர் விசாரணை நகலை எடுத்துகொண்டு 28.09.2021 ஆம் தேதி பகல் 11.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் பீர் முகமது, மொஹர் பானு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும்.

சாட்சிகள் ரெஜினா, செய்துன் நிலோபர், ஹமீது அலி, அபு பக்கர், முகமது இட்ரின் சஃபி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் பீர் முகமது, மொஹர் பானு ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். வழக்கின் எதிரி காவல் நிலையத்தில் 28.09.2021ம் தேதியில் ஆஜராகி நிலைய பிணையில் சென்றுள்ளார்.

புகார் மனுவின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரி குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இதச பிரிவு 294(b) and Sec.4 of TNPHW Act–ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கிகொண்டு புகார் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம் மற்றும் மற்ற வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நாள், இடம், விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.08.12 17:07:59 +0530